==========================================================

# காவேரிப்பட்டினம் சாப்பாடி (எ) சாப்பாத்தி (கிருட்டிணகிரி மாவட்டம்) ஊரில் நடுகல் வழிபாடு

==========================================================

முனைவர் ச. மணிமேகலை,
உதவிப் பேராசிரியர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர்.

==========================================================

**முன்னுரை**

நடுகல் வழிபாடு என்பது, போரில் இறந்த வீரர்களின் நினைவாக நடப்பட்ட கல்லை வழிபடும் ஒரு பண்டைய தமிழர்களின் வழிபாடாகும். இந்த நடுகற்கள், வீரர்களின் நினைவாகவும், அவர்கள் செய்த வீரச் செயல்களுக்காகவும் நடப்பட்டன. போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரர்களின் நினைவாக, நடுகற்கள் நடப்பட்டன. அந்த நடுகற்களில் வீரர்களின் பெயர்களும் அவர்கள் செய்த வீரச் செயல்களும் பொறிக்கப்பட்டிருக்கும். நடுகல் வழிபாடு சங்க காலத்திலேயே மிகவும் பிரமலமாக இருந்தது. நடுகல் வழிபாடு வீரர்களைப் போற்றும் ஒரு வழிபாடாக மட்டுமல்லாமல், ஒரு பண்பாட்டு அடையாளமாகவும் கருதப்படுகிறது. இந்த வழிபாட்டு முறைகளினால் தமிழர்களின் வீரத்தையும், தியாகத்தையும், பண்பாட்டையும் அறிய முடிகிறது. கணவன் உயிர் நீத்தால் அவனுடைய மனைவி அவனின்றி வாழக் கூடாது என்ற எண்ணத்தில் கணவனுடன் அல்லது கணவன் இறந்த பிறகு வேள்வித் தீமூட்டி தீயில் பாய்ந்து தானும் உயிரை மாய்த்துக் கொள்வதற்கு உடன்கட்டை ஏறுதல் அல்லது தீய்ப்பாய்தல் என்று பெயர். இந்த இரண்டு வகைக் கற்களும் தமிழ்நாட்டில் ஆங்காங்குக் பெருமளவில் கிடைக்கின்றன. இவற்றை மெய்ப்பிக்கும் வகையில் கிருட்டிணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினத்தின் சாப்பாத்தி (அ) சாப்பாடி என்ற ஊரில் நடுகல் வழிபாடு குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**சங்க இலக்கியங்களில் நடுகல் வழிபாடு**

சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான அகநானூறு என்னும் நூலில், வெட்சி மறவர்கள் கவர்ந்து சென்ற ஆநிரைகளை கரந்தை வீரர்கள் மீட்டுப் போரில் உயிர் விட்டனர். இறந்த

வீரர்களுக்கு இயற்கையாகவே நடுகல் போல் அமைந்திருக்கும் ஒரு பெரிய பாறையில் இறந்த வீரனின் உருவத்தைச் செதுக்கினர், பின்னர், அதை நீராட்டி, மஞ்சள்பூசி, கரந்தைப் பூக்கைச் சூட்டினர் என்று அப்பாடல் சொல்கிறது. அவை,

“ஏறுடை இனநிரை பெயர பெயராது
செறிசுரை வெள்வேல் மழவர் தாங்கிய
தறுய ணாளர் நல்லிசை நிறுமார்
பிடிமடிந்தன்ன குறும்பொறை மருங்கின்
நட்ட போலும் நடாஅ நெடுங்கல்
அகல் இடங் குயின்ற பல்பெயர் மண்ணி”

(அகம் – 269: 4 – 8)

என்னும் பாடலடிகளில் சொல்லப்பட்ட ஏறத்தாழ அதே வழிபாட்டை இந்நடுகல் வழிபாடு உறுதி செய்கின்றது.

“பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி
மரல் வகுந்து தொகுத்த செம்பூங் கண்ணியொடு
அணிமயிற் பீலிசூட்டிப் பெயர் பொறித்து
இனி நட்டனரே கல்லும் கன்றொடு
கறவை தந்து பகைவ ரோட்டிய
நெடுந்தகை கழிந்தமை அறியாது
இன்றும் வருங்கொல் பாணரது கடும்பே”

(புறம். 264)

என்ற பாடலடிகளில், ஒரு வீரன் ஆநிரைகளை கவர்ந்து சென்ற பகைவர்களை விரட்டி ஓட்டி வெற்றி பெறுகிறான். கன்றுடன் கறவைப் பசுக்களை மீட்டு வந்து ஊர் மக்களிடம் ஒப்படைக்கிறான். ஆனால் பகைவர்களோடு போரிட்டதில் விழுப்புண் ஏற்பட்டு இறந்து விடுகின்றான். இறந்த வீரனை ஊர்மக்கள் பருக்கைக் கற்கள் நிறைந்த பதுக்கையிடத்தே நல்லடக்கம் செய்து, அவ்வீரனுக்கு நடுகல் அமைத்தனர். நடுகல் வழிபாடு குறித்தக் கருத்துகள் சங்க இலக்கிய நூல்களான பட்டினப்பாலை, மலைபடுகடாம் மற்றும் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலும் பதிவாகியுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு இன்றைக்கும் பெரும்பாலான இடங்களில் நடுகல் வழிபாடு வேடியப்பன் என்ற பெயரில் நடைபெறுகின்றன.

**சாப்பாத்தி (அ) சாப்பாடி பெயர்க்காரணம்**

கிருட்டிணகிரி மாவட்டத்தின், காவேரிப்பட்டின ஒன்றியத்தில் உள்ள ஒரு பகுதி சாப்பாத்தி (அ) சாப்பாடி என்பதாகும். இங்குள்ள மகளிர் சுய உதவிக்குழு மகளிர் அதிகளவு சப்பாத்தி தயாரித்து விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபடுவதால் சாப்பாடி என்பது சாப்பாத்தி என்று மருவி வந்துள்ளது. இப்பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இரண்டு நடுகற்கள் உள்ளன. கிருட்டிணகிரி மாவட்டத்தில் பல்வேறு தொல்லியல் தடயங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்நிலையில் ஆநிரை மீட்டலுக்கான இரண்டு நடுகற்கள் தனித்தனி பலகைக்கற்களில் செதுக்கப்பட்டுள்ளன.

**முதலாவது நடுகல்**

ஆநிரைகளை மீட்டலுக்கான போரில் இவ்விரு வீரர்களும் இறந்துதிருக்கின்றனர். முதல் நடுகல் உருவத்தில் வீரனின் வலது கையில் வாளுடனும், இடது கையில் கேடயத்துடனும் காட்சியளிக்கின்றார். இடுப்பில் கச்சையுடனும், குறுவாளுடனும் இருக்கிறார். வலதுபுறமாக கொண்டையிட்டும், இரு காதிலும் குண்டலங்கள் அணிந்தும், கால்களில் வீரக்கழல்கள் அணிந்தும் கழுத்துப்பகுதிகளில் அணிகலன்கள் அணிந்தும் உள்ளார்.

வீரனின் வலதுபுறத்தில் பெண் உருவம் ஒன்றுள்ளது. கணவன் இறந்தவுடன் அவனுடைய மனைவி உடன்கட்டை ஏறும் வழக்கம் பழங்காலத்தில் இருந்துள்ளது. இதை மெய்ப்பிக்கும் வகையில் அப்பெண் உடன்கட்டை ஏறியதை இக்கல் நிரூப்பிக்கிறது. கையில் தண்ணீர் குவளையுடன் காட்சித்தருகிறாள். பெண்ணின் கழுத்தில் ஆபரணங்களுடன் காட்சித்தருகிறாள். வீரனின் இடதுபுறத்தில் ஒரு பானை ஒன்று உள்ளது. இதற்கு கற்குடம் என்று பெயர். போருக்குச் செல்லும் போது வெற்றிக்களிப்புச் செய்வதற்காக கள்ளையுண்டு கொண்டாட்டங்களைச் செய்துள்ளதை சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவ்வட்டப் பகுதியைச் சுற்றி காகம், பல்லி பறப்பது போன்ற காட்சிகள் இடம்பெறுகின்றன. இக்காட்சிகள் போருக்குச் செல்லும் போது வீரன் நல்நிமித்தம் பார்த்துச் சென்றுள்ளார் என்பதைச் சுட்டுக்கிறது.

**உடன்கட்டை (சதி) நடுகல்**

தீக்குளித்து இறந்துபோன பெண்களின் சதிக்கற்களைக் கோயிலில் வைத்து வழிபடும் வழக்கம் நாயக்கர் காலத்தில் தமிழகத்தில் பரவலாக இருந்துள்ளது. இக்கோயில்கள் மாலையம்மன் கோயில், மாலையீடு, தீப்பாய்ந்த அம்மன் கோயில் என்று அழைக்கப்படுகின்றன.

முதலாவது நடுகல்லில் தீப்பாய்ந்து இறந்துபோன பெண்ணின் உருவம் கணவனுக்கு அருகிலேயே நின்ற கோலத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பெண்ணின் கையில் மங்கலப் பொருளான குங்குமச் சிமிழ் உள்ளது. பெண்ணின் கையில் தண்ணீர்க்குடம் ஒன்றும் உள்ளது.



**ஆநிரை மீட்டலுக்கான நடுகல் வீரன் மற்றும் உடன்கட்டை நடுகல்**

**இரண்டாவது நடுகல்**

இரண்டாவது நடுகல்லில், வீரரின் வலது கையில் வாளுடனும், இடது கையில் கேடயத்துடனும் காட்சித்தருகிறார். மறவீரரின் இடுப்பில் கச்சை மற்றும் குறுவாள் காணப்படுகின்றது. இரு கால்களிலும் வீரக்கழல்கள் அணிந்துள்ளார். இந்நடுகல்லின் கீழ்ப்புறத்தில் இரண்டு ஆநிரைகள் (மாடுகள்) போன்ற உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இக்காட்சிகளைப் பார்க்கும்பொழுது ஆநிரை மீட்டலில் இவ்விரு வீரர்களும் இறந்துள்ளனர். அவர்களின் நினைவாக இந்நடுகல் நடப்பட்டுள்ளன. இவ்வூர் மக்கள் இந்நடுகற்களை வேடியப்பன் என்ற பெயரில் இன்றைக்கும் வழிபாடு செய்து வருகின்றனர்.



**வீரனின் நடுகல்**

**முடிவுரை**

தமிழ் மறவர்கள் தங்களுடைய ஊரைப் பகைவர்களிடமிருந்து காப்பற்றவும் பகைவர்கள் ஆநிரை கவர்ந்த நிலையில் ஆநிரை கவர்ந்த பகைவர்களிடம் இருந்து மறவன் அல்லது மறவர்கள் ஆநிரைகளை மீட்டுப் போரில் வீர மரணம் அடைந்தனர். படை எடுத்துவரும் பகைவரிடம் இருந்து ஊரைக் காப்பாற்றிய பின்னர் வீர மரணம் எய்துகின்றான். அரசன் நலம் பெற மறவன் ஒருவன் உயிர் தியாகம் செய்கின்றான். இவ்வாறு உயிர் துறந்த வீரர்களுக்கு அவர்களைப் போற்றும் வகையில் பொது மக்களும் அரசனும் உறவினரும் நடுகல் எடுக்கின்றனர்.

அந்த நடுகல் அனைவராலும் வணங்கப்படுகிறது. காலங்காலமாக வழிபாட்டில் சில நடுகற்கள் இருந்து வருகின்றன. ஆகவே நடுகல் வழிபாடு தொன்று தொட்டு இந்த மண்ணில் நிலைத்து இருந்து வருகிறது. கணவன் உயிர்நீத்தால் அவனுடைய மனைவி அவனின்றி வாழக் கூடாது என்ற எண்ணத்தில் கணவனுடன் தீயில் பாய்ந்து தானும் உயிரை மாய்த்துக் கொள்வதற்கு உடன்கட்டை ஏறுதல் அல்லது தீய்ப்பாய்தல் என்று பெயர். அவற்றையேல்லாம் ஆராய்ந்து வெளிகொணரும் போது தமிழர்களின் பண்பாட்டையும் நாகரிக வாழ்வியலையும் அறியும் வாய்ப்பாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**துணை நின்ற நூல்கள்**

1. பாலசுப்பிரமணியன், கு. வே., புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

2. செயபால், இரா., அகநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.